இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 14-08-2023

பதிலுரை அல்ல, விரக்தி உரை!

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சிமீது என்ன நோக்கத்துக்காக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க்கட்சிகள் கொண்டு வந்தார்களோ, அந்த நோக்கம் நிறைவேறிவிட்டது.

1. நாடாளுமன்றத்துக்கே வராத பிரதமர் நரேந்திர மோடியை நாடாளுமன்றத்துக்குள் வரவைக்க வேண்டும்.

2. நாடாளுமன்றத்தில் பேசாத பிரதமரை பேச வைக்க வேண்டும். - இதுதான் எதிர்க்கட்சிகளின் உண்மையான நோக்கம். இந்த இரண்டு நோக்கமும் நிறைவேறிவிட்டது. வராதவர், வந்தார். பேசாதவர், பேசினார்.

பிரதமரை நோக்கி எதிர்க்கட்சிகள் எழுப்பிய முக்கியமான கேள்விகள் இரண்டு.

1. பற்றி எரியும் மணிப்பூருக்கு ஏன் செல்லவில்லை?

2. நாடாளுமன்றத்துக்குள் வருவதற்கு என்ன பயம்? - இதுதான் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுப்பிய இரண்டு முக்கியமான கேள்விகள். இந்த இரண்டு கேள்விகளுக்கும் இறுதி வரை அவர் பதில் சொல்லவே இல்லை. இரண்டு மணி நேரம் பேசினார். ஆனால் முக்கியமான இந்த இரண்டு கேள்விக்கும் பதில் சொல்லவில்லை.

ஆகஸ்ட் 10 ஆம் தேதி மாலை 5.09 மணிக்கு பேசத் தொடங்கினார் பிரதமர். 2014 ஆம் ஆண்டு தேர்தல் மேடைகளில் காங்கிரஸ் கட்சி மீது என்ன குற்றச்சாட்டுகளை வைத்து வந்தாரோ அதே குற்றச்சாட்டுகளை வைத்தார். தொடர்பில்லாத ஏதேதோ பேசிக் கொண்டு இருந்தார். 'மணிப்பூர்' என்று குரல் எழுப்பிக் கொண்டே இருந்தார்கள் எதிர்க் கட்சிகள். மணிப்பூரைப் பற்றி பிரதமர் வாயே திறக்கவில்லை. ஒன்றரை மணி நேரமாகப் பேசியவர் மணிப்பூர் என்ற சொல்லையே உச்சரிக்கவில்லை. 6.40 மணிக்கு எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்தார்கள். வெளிநடப்பு செய்தது அவருக்கு வசதியாக ஆனது. உடனே மணிப்பூர் பற்றி பேசத் தொடங்கினார். 7.22 மணிக்கு ஒரு வழியாக உரையை முடித்துக் கொண்டார். 2 மணி நேரம் 13 நிமிடம் பேசிக் கொண்டு இருந்துள்ளார் பிரதமர்.

பிரதமரின் பதிலுரை என்பது பதில்கள் எதுவும் சொல்லாத உரை. இந்த உரை, 'பிரதமர்' ஆற்றிய உரையாக அமைய வில்லை. பா.ஜ.க. தலைவர் ஆற்றிய உரையாக அமைந்திருந்தது. தேர்தல் நேரத்தில் காங்கிரஸ் கட்சிக்கு எதிராகப் பேசும் உரையாக மோடியின் உரை அமைந்திருந்தது. 'எந்த மாநிலத்திலும் காங்கிரஸ் இல்லை' என்று பிரதமர் சொன்னார். அப்படியானால் இரண்டு மணி நேரம் எதற்காக காங்கிரஸ் கட்சிக்கு பதில் சொன்னார்? இல்லாத காங்கிரசுக்கு பதில் சொல்வதற்கு எதற்காக இரண்டு மணி நேரத்தைச் செலவு செய்தார்?

ஒரு ஆட்சி மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பதில் சொல்லும் பதிலுரை எப்படி அமைந்திருக்க வேண்டும்? அந்த ஆட்சி இந்த நாட்டு மக்களுக்கு எந்த வகையில் நம்பிக்கை தரும் ஆட்சியாக அமைந்துள்ளது என்பதைச் சொல்வதாக அமைந்திருக்க வேண்டும். தனது ஆட்சி செய்த சாதனைகளை அடுக்குவதாக அமைந்திருக்க வேண்டும். ஒவ்வொரு திட்டமும் எத்தனை கோடி மக்களுக்கு நன்மை தந்துள்ளது என்பதை வரிசைப்படுத்துவதாக அமைந்திருக்க வேண்டும். நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு இந்தியா எப்படி இருந்தது, இப்போது எப்படி வளர்ந்துள்ளது என்பதைப் புள்ளி விபரங்களோடு சொல்வதாக அமைந்திருக்க வேண்டும். 'இப்படி எல்லாம் நன்மை செய்திருப்பவர்கள் மீது நம்பிக்கையில்லை என்று சொல்வது எதிர்க் கட்சிகளின் உள்நோக்கம் ஆகும்' என்று முடிக்க வேண்டும்.

மாறாக, காங்கிரஸ் கட்சியை, ராகுல் காந்தியை, இந்தியா முழுமைக்குமான எதிர்க்கட்சிகளை, 'இந்தியா' கூட்டணியை, திராவிட முன்னேற்றக் கழகத்தை - விமர்சிப்பதன் மூலமாக பா.ஜ.க.வின் தேர்தல் பிரச்சார மேடையாக நாடாளுமன்றத்தை பிரதமர் நரேந்திர மோடி பயன்படுத்திக் கொண்டார்.

'காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருப்பதைப் போலவும் பா.ஜ.க. எதிர்க்கட்சியாக இருப்பதைப் போலவும்தான் இந்த உரை அமைந்திருந்தது' என்று மிகச் சரியாகவே கிண்டல் அடித்துள்ளார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். 'இந்துஸ்தான் டைம்ஸ்' ஏட்டுக்கு அளித்துள்ள பதிலில், "பிரதமர் நரேந்திரமோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு மீது நம்பிக்கையில்லா தீர்மானம் எதிர்க்கட்சிகளால் கொண்டு வரப்பட்டது. மூன்று நாட்களாக பா.ஜ.க. அரசு மீதும், குறிப்பாக பிரதமர் நரேந்திரமோடி மீதும் பல்வேறு குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டது.

அது எதற்கும் பதில் சொல்லவில்லை பிரதமர். மாறாக, தேர்தல் மேடைகளில் பேசுவதைப் போல காங்கிரஸ் கட்சியை விமர்சித்து பேசிக் கொண்டு இருந்தார். 2014 தேர்தலுக்கு முன்னதாக அவர் காங்கிரஸ் கட்சி மீது என்ன குற்றச்சாட்டு வைத்தாரோ, அதே குற்றச்சாட்டை 9 ஆண்டுகளுக்குப் பிறகும் வைத்துக் கொண்டு இருந்தார். பிரதமர் உரையை **யாராவது எடுத்து முழுமையாகப் படித்தால், இது காங்கிரஸ் ஆட்சி மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்து 'எதிர்க்கட்சித் தலைவர்' மோடி பேசுவதைப் போல இருக்கும்" என்று சொல்லி இருந்தார் முதலமைச்சர் அவர்கள். இதுதான் உண்மை.**

ஒரு முக்கியமான கருத்து பிரதமரின் உரையில் இருந்து தெளிவாகத் தெரிய வந்துள்ளது...

'இந்தியா' கூட்டணி வலிமையோடு அமைந்துள்ளது என்பது பிரதமர் உரை மூலமாகத் தெரிகிறது. இந்தக் கூட்டணியின் பலம் என்பதும், அது வெற்றிக் கூட்டணியாக அமைந்திருக்கிறது என்பதும் நம்மை விட பிரதமர் அதிகமாக உணர்ந்துள்ளார். தனக்கு எதிரான வாக்குகளை மொத்தமாக வாங்கும் வல்லமை 'இந்தியா' கூட்டணிக்கு உண்டு என்பதை அவர் உணர்ந்துவிட்டார். 'இந்தியா' கூட்டணித் தலைவர்களால் தனது இமேஜ் சரிந்து விட்டது என்பதை அறிந்துவிட்டார் பிரதமர். அந்தக் கோபத்தைதான் - அந்த விரக்தியைத்தான் தனது உரை மூலமாக வெளிப்படுத்த முயற்சித்துள்ளார். எனவே, இது பதிலுரை அல்ல, விரக்தி உரை!

மத்தியப் பல்கலைக் கழகங்களில் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோருக்கு இழைக்கப்படும் சமூக அநீதியைக் கண்டித்து திராவிடர் கழகம் சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தலைமையில் எழுச்சியுடன் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டம்.

பற்றி எரிந்துகொண்டிருக்கும்

மணிப்பூரை விட்டுவிட்டு தமிழ்நாட்டை பற்ற வைக்க முயலுவதா?

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கண்டனம்!

சென்னை, ஆக.14- பற்றி எரிந்துகொண்டிருக்கும் மணிப்பூரை விட்டுவிட்டு தமிழ்நாட்டை பற்ற வைக்க முயல்வதா என்று வினா எழுப்பி திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளார்.

திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அறிக்கை வருமாறு:

பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். ஆட்சியில் மணிப்பூர் வடகிழக்கு மாநிலத்தில் இன்றுவரை கலவரம் ஓயாது சொந்த மாநிலத்திலேயே ஒடுக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பற்று, அகதிகளாக்கப்பட்டு, பொது அமைதி திரும்பாத நிலையிலும், "நாட்டின் பிரதமராக உள்ள மோடி அவர்கள், அங்கே சென்று, வெகுவாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏன் ஆறுதல் கூறவில்லை, அதைச் செய்வதன்மூலம் அந்த மக்களின் மனப்புண்ணுக்கு மருந்திட வேண்டாமா?" என்று கேட்கும் உரிமை ஜனநாயகத்தில் மக்கள் பிரதிநிதிகளான எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உண்டு என்பதற்காகவே பிரதமர் அவைக்கு வரவேண்டும் என்று கேட்டனர்; அதனால், நாடாளுமன்ற நடவடிக்கைகள் ஸ்தம்பித்தன; பிறகு அவரை அவைக்கு வர வழைத்து அவரது மவுனத்தைக் கலைக்க வேண்டுமென்பதற்காக, நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்த உத்தியை பார்லிமெண்டரி செயல் முறையைப் பயன்படுத்தினர்! அதில், ஓரளவு வெற்றிப் பெற்றனர்!

அவை நிகழ்வின் இறுதியில் வந்து, சுமார் 2 மணிநேரத்திற்குமேல் நீண்ட உரையாற்றிய பிரதமர், எதிர்க்கட்சிகள்மீது அடுக்கடுக்காக குற்றம்சாட்டினார்; இல்லை, இல்லை எதிர்கட்சிகளைச் சாடினார் என்பது அவ்வுரையைக் கேட்ட அனைவருக்கும் புரிந்தது!

அவரது உரையால் இழந்த எதிர்க் கட்சியினர் பேசாது வெளிநடப்புச் செய்தனர். மணிப்பூர் கலவரங்களை ஒடுக்கி, மீண்டும் நம் மணிப்பூர் மக்களுக்கு ஆறுதல் ஏற்படும்படியான வழிவகைக் கருத்துகள் பிரதமர் உரையில் ஏதும் இல்லை!

மாறாக, காங்கிரஸ் மற்றும் தி.மு.க.பற்றி கடுமையாக விமர்சித்து 'பிரிவினைவாதிகள்' என்ற பழைய உடைந்து போன ஆயுதத்தினைப் பயன்படுத்தி தற்காப்புத் தேடினார் பிரதமர்!

தமிழ்நாடு அமைச்சர் எ.வ.வேலு, "கருஞ்சட்டை விருது" வழங்கும் நிகழ்ச்சியில் பேசிய ஒன்றைக் குறிப்பிட்டு அவையின் மரபு நெறிமுறைகளை அப்பட்டமாகப் புறந்தள்ளிவிட்டு, ஆத்திரத்தில் குற்றம் சுமத்தினார்!

தி.மு.க. தமிழ்நாடு பற்றிய தங்களது 'வசிய மாத்திரைகள்' 'மயக்க பிஸ்கெட்டுகள், 'தமிழ்ப் பெருமைப் போர்வைகள்' கூட எவ்விதத்திலும் பயன்பட வில்லையே என்ற கோபம், நாளும் அடக்குமுறைகளை, அதிகார அம்புகளை ஏவினாலும் அதையும் தாண்டி நிமிர்ந்து நிற்கும் நிலையில் தி.மு.க.வும், அதன் தலைவரும் உள்ளனரே என்பதால் தான் ஆத்திரம் அணை உடைந்து அது நாடாளுமன்றத்தில் வெடித்து உள்ளது!

ஹிந்தி, சமஸ்கிருதத் திணிப்பு, நிதி நெருக்கடியைத் தந்தாலும், அதையும் தாண்டி செயல்படும் அரசு தி.மு.க. அரசு என்று உணர்ந்து, "அதுதானே இத்தனை எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைத்து 'இந்தியா' கூட்டணியை உருவாக்கி இருப்பதற்கு மூல பலமாக இருக்கிறது. எனவே, இவர்களை இனி குறி வைக்க வேண்டும்'' என்பதற்காக ஒருபுறம் ஆளுநர் மூலம் குடைச்சல், மறுபுறம் உரிய நிதியைக்கூட ஒதுக்காதது போன்ற பல தடைகளை உருவாக்கி வெறுப்பின் உச்சத்தில் உள்ளனர். தமிழ் நாட்டு 'திராவிட மாடல்' ஆட்சி அதன் ஒப்பற்ற முதலமைச்சர் பதற்றமின்றி, அமைதியாகவும், உறுதியாகவும், 'தடைக்கற்கள் உண்டென்றாலும், அவற்றை தாங்கும் தடந்தோள்கள் எங்களுடையது' என்பதை நாளும் நிரூபித்து கடமையாற்றி வருவது கண்டு கோபமும், கொந்தளிப்பும் ஏற்பட்டுள்ளது.

அதனால்தான் ஒரு சிறு அரங்கத்தில் ஓர் அமைச்சர் கூறிய எளிய கொள்கை விளக்கத்தை, அவர்களுக்கு எதிரானதாகப் பயன்படுத்தி, நாடாளுமன்றப் பேச்சில் பிரதமர் பதிவு செய்துள்ளது முற்றிலும் சரியல்ல.

''ஆரம்பத்தில் நமக்குத் தெரிந்ததெல்லாம் தமிழ் நாடு; இந்தியா என்பது நமக்குப் பிறகே தெரிந்தாலும், இப்போது நாம்தான் ஒட்டுமொத்த இந்தியாவையும் ஜனநாயக ரீதியாகக் காப்பாற்ற வேண்டிய பொறுப்புடன் செயல்பட வேண்டிய வர்களாக உள்ளோம்'' என்ற கருத்துப்பட தமிழ் நாடு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் கொள்கை வரலாற்று ரீதியாகக் கூறியதை ஒன்றிய அமைச்சரும், பிரதமரும் ஏதோ பெரிய குற்றச்சாட்டாக நாடாளுமன்றத்தில் கூறியுள்ளனர்!

அப்படி அவர் கூறியது எவ்வகையில் தவறான வரலாற்று ரீதியான உண்மைக்கு மாறான தவறான கருத்தாகும்?

சனாதனம், சனாதனம் என்று இப்போது சதா பேசித்திரிகிறவர்களுக்கு அந்த சனாதனம் பாட நூலாக, காசி ஹிந்து கல்லூரியில் (பிறகு அதுவே சர்வ கலாசாலை) வைக்கப்பட்டது. அதே நூல் 1907 இல் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. அந்தப் பாட நூலின் தொடக்கத்தில் இந்தியாபற்றியும் எப்படி குறிப்பிடப்பட்டுள்ளது? அது ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி.,க்கு முக்கிய ஆரம்ப கர்த்தாவான மதன்மோகன் மாளவியா அவர்களால் நிறுவப்பட்ட கல்லூரி.

முதலாம் பாகம்

பிரவேசம்

"ஸநாதனதர்மம்....

இவ்வரிய மகாஜாதியாரின் முதல் கும்பம் இப்பொழுது இந்தியாவென்று கூறப்படும் இந்நாட்டின் வடபாகத்தில் குடியேறினாலும், அவ்வித மக்கள் முதலில் குடியேறின நாட்டிற்கு 'ஆரியவர்த்தம்' என்று பெயரிடப்பட்டது!

கிழக்கு மேற்கு சமுத்திரங்கட்கும், ஹிமாலயம், விந்தியமாகிய இவ்விரண்டு பர்வதங்களுக்கும் மத்தியில் உள்ள பூமியை ஆரியவர்த்தம் என்று கூறுவோர் பெரியோர்.''

இதற்கு பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ். பிரதமர் மோடி, ஸ்மிருதிரானிகள் என்ன பதில் கூறுவர்?

ஆனால், அதற்கு முன்னாலேயே தமிழ்கூறும் நல்லுலகம், திராவிடம் தனி தேசமாகவே பல தேசங்களைப் போல இருந்தது என்பதை நாம் கூறவில்லை.

சில அரைவேக்காடுகள், "மேலை நாட்டு கிறித்துவப் பாதிரியார்கள், கால்டுவெல் பாதிரியார்தான் முதலில் இவர்களுக்குத் 'திராவிடத்தை'ச் சொன்னார்'' என்று உளறுகிறார்களே, அது உண்மை அல்ல.

மனுஸ்மிருதி கால்டுவெல் பாதிரியாரா எழுதினார்?

அதில் 10 ஆவது அத்தியாயம், 44 ஆவது சுலோகம் திராவிடம்பற்றிக் கூறுகிறதே!

அதுமட்டுமா?

ஹிந்து மதத்தின் முக்கியப் புராணமான பாகவதத்தில் திராவிட தேசம் என்றே குறிப்புகள் உள்ளனவே அதை எந்த வெள்ளைக்காரர் சொன்னார்?

இதன்படி முதன்முதலில் தமிழ்நாட்டைத்தான் நாம் அறிவோம் நமக்கு அப்போது இந்தியா தெரியாது!

குழந்தையாக நாம் பிறந்ததும் முதலில் நமது அம்மாவைத்தான் நமக்குத் தெரியும்; பிறகுதான் அப்பா, மற்றவர்கள், உறவுக்காரர்கள் என்பர்!

அதுதானே உண்மை! அது எப்படிப் பிரிவினைவாதம் ஆகும்?

இப்படி "பூச்சாண்டி" காட்டுவது அவர்களுக்குப் பயன்படாது!

ஹிந்து மதத்தில் பல பிரிவுகள் வைணவர்கள், சைவர்கள் உண்டே, ஸ்மார்த்தர்களை இவர்கள் ஏற்றுக் கொள்வார்களா? பிரிவினைவாதிகள் அல்லவா?

வைணவர்களில் வடகலை, தென்கலை பிரிவினர்கள் போராட்டம் இன்னமும். அவர்களைப் பிரிவினைவாதிகள் என்பீர்களா?

வடகிழக்கில் மணிப்பூரில் எரிகிற தீயை அணைப்பதற்கு முன்னுரிமை தரவேண்டிய பா.ஜ.க. அரசும், அதன் ஆட்சிப் பரிவாரமும், அதை விடுத்து புதிய இடத்தில், அமைதிப்பூங்காவில் புது நெருப்பைப் பற்ற வைக்க முயற்சிக்கலாமா?

நாளும் ஹிந்தித் திணிப்பு, கலாச்சார அழிப்பு, கல்விக் கொள்கைத் திணிப்பு, பெயர் மாற்ற முனைப்பு இவையெல்லாம் இவர்கள் உருவாக்கும் தீப்பொறிகள் அல்லவா?

தமிழ்நாடு.

தி.மு.க. பிரிவினைவாதிகள் என்றால், இந்தியா I.N.D.I.A. என்று அவர்தம் கூட்டணிக்குப் பெயர் வைப்பதை எப்படி ஏற்றிருப்பார்கள்?

தமிழ்நாடு ஒருபோதும் அதன் தனித்தன்மை, மொழி, பண்பாடு, சமூக நீதி, சுயமரியாதையை எவருக்காகவும், எதற்காகவும் விட்டுக் கொடுக்காது. மண்ணும், மக்களும் பக்குவப்பட்டவர்கள்.

தெய்வீக, ஆன்மிக மயக்க மருந்து இங்கே வேலை செய்யாது.

தி.மு.க.விற்கு நீங்கள் உரம்போட்டு வளர்ப்பதற்குத் தான் பயன்படும். மக்கள் உடன் நிற்பார்கள். புரிந்து கொள்ளட்டும் பா.ஜ.க.

இவ்வாறு கி.வீரமணி அவர்கள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு சிறப்பான முறையில்

வங்கிக் கடன் வழங்கிய வங்கிகளுக்கு வங்கியாளர் விருதுகள்!

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று வழங்குகிறார்!

சென்னை, ஆக. 14 - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் நகர்ப்புற சுய உதவிக் குழுக்களில் உள்ள மகளிர் பயன் பெறும் வகையில் வங்கிக் கடன் இணைப்பு, நகர்ப்புற சாலையோர வியாபாரிகளுக்கு உணவுத்தரச் சான்றிதழ், திறன் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு ஓட்டுநர் உரிமம் / பணி நியமன ஆணைகள், சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த சிறு தொழில் முனைவோர்களுக்கு கடனுதவிகள், நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு சிறப்பான முறையில் வங்கிக் கடன் வழங்கிய வங்கிகளுக்கு வங்கியாளர் விருதுகள் மற்றும் தொழில் பயிற்சி நிறுவனங்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் விழா இன்று (14.08.2023) சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெறுகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், மகளிரின் முன்னேற்றத்திற்காக, 1989ஆம் ஆண்டு முதன்முறையாக தருமபுரி மாவட்டத்தில் துவங்கப்பட்ட மகளிர் திட்டம் இன்று தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது சமூக, பொருளாதார மேம்பாட்டை அடைவதற்கு சுய உதவிக் குழுக்கள் மற்றும் இத்திட்டத்தின் மூலம் சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளை உருவாக்கி, முறையான பயிற்சிகள் வழங்கி, வருமானம் ஈட்டும் தொழில்களைத் தொடங்க வங்கிக் கடன் இணைப்புகள் ஏற்படுத்தி சுய உதவிக் குழு இயக்கத்தை வலுப்படுத்தி வருகிறது.

மகளிரின் முன்னேற்றத்திற்கான அரசு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் அங்கமான தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் நகர்ப்புறங்களில் சுய உதவிக் குழு இயக்கத்தின் வளர்ச்சிக்காக முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இந்த இயக்கத்தின் கீழ் நகர்ப்புறங்களில் சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டு, அவற்றின் உறுப்பினர்களுக்கு தொழிற்பயிற்சிகள், வங்கிக் கடன் இணைப்புகள், சுய தொழில் வாய்ப்புகள் போன்றவை உருவாக்கித் தரப்படுகின்றன.

இதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் நகர்ப்புற சுய உதவிக் குழுக்களில் உள்ள மகளிர் பயன் பெறும் வகையில் வங்கிக் கடன் இணைப்பு, நகர்ப்புற சாலையோர வியாபாரிகளுக்கு உணவுத்தரச் சான்றிதழ், திறன் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு ஓட்டுநர் உரிமம் / பணி நியமன ஆணைகள், சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த சிறு தொழில் முனைவோர்களுக்கு கடனுதவிகள், நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு சிறப்பான முறையில் வங்கிக் கடன் வழங்கிய வங்கிகளுக்கு வங்கியாளர் விருதுகள் மற்றும் தொழில் பயிற்சி நிறுவனங்களுக்கு சான்றிதழ்கள் ஆகியவற்றை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கவுள்ளார்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், வங்கிகளின் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க திருவள்ளூர் மாவட்டம், ஆவடி மாநகராட்சி, பட்டாபிராம், இந்து கல்லூரியில் நேற்று முன்தினம் (12.08.2023) நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு பெற்ற நபர்களுக்கு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் பணி ஆணைகளை வழங்கினர். முன்னாள் அமைச்சர் / ஆவடி சட்டமன்ற உறுப்பினர் சா.மு.நாசர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ் ஆகியோர் முன்னிலையில் வாழ்த்து தெரிவித்தனர். உடன் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, ஆவடி மாநகராட்சி ஆணையர் தர்ப்பகராஜ், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் என்.ஓ.சுகபுத்ரா, வேலைவாய்ப்பு துறை மண்டல இணை இயக்குநர் திருமதி.ஆ.ஜோதிமணி, உதவி இயக்குநர் திருமதி.விஜயா, தமிழ்நாடு மாநில ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் உ திட்ட இயக்குநர் திருமதி. மலர்விழி, இந்து கல்லூரி முதல்வர் முனைவர்.ஜி.கல்விக்கரசி, உள்ளாட்சி பிரதிநிதிகள், தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.